**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மானாமதுரை.**
**முன்னிலை: திரு.S. முகம்மது யூசுப் நவாஸ், B.A., B.L.,**
**மாவட்ட உரிமையியல் நீதிபதி, மானாமதுரை.**

**2025 ஆம் ஆண்டு ஜீன் 21-ஆம் நாள் சனிக்கிழமை**

**இடைக்கால மனு எண். 3/2025**
**இன்**
**அசல் வழக்கு எண். 79/2022**

ஹபீப்ரஹ்மான் ---மனுதாரர்/வாதி

**/எதிர்/**

1. முகம்மது இக்பால்
2. காதர்மணியம் ......எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனு என்முன்பு 13.06.2025 அன்று இறுதி விசாரணைக்காக வந்தபோது மனுதார் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.T.முத்துராமன் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதார்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.K.ஹபீபூர்ரஹ்மான் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதம் கேட்டும், இதுநாள்வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.

**உத்தரவு**

மனுதாரர் தரப்பில் மனுவில் கண்ட ஆவணத்தை தனது தரப்பு கூடுதல் சாட்சிய ஆவணமாக ஏற்றுக்கொள்ள வேண்டி இம்மனு உரிமையியல் நடைமுறை சட்டம் கட்டளை 7 விதி 4(3)ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. மனு மற்றும் அபிடவிட்டின் சுருக்கம்:**

தாவா சொத்தை மனுதாரருக்கு 15.09.1993ம் தேதி ஒரு பதிவில்லாத உயில் ஆவணம் எழுதிக்கொடுத்து தனது சுயஅனுபவத்தில் விட்டுவிட்டு தனது தகப்பனார் 13.03.1997ம் தேதி இறந்துவிட்டார் என்றும், தாவா சொத்தை தனது அனுபவத்தில் வைத்து விவசாயம் செய்து வருவதாகவும், விவசாய பணிகள் செய்ததற்கு ராஜகம்பீரம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தில் கடன் பெற்று திரும்ப செலுத்திய ரசீதை ஆவண சான்றாக சேர்த்துக்கொள்ள வேண்டியது அவசியமாக உள்ளது என்றும், தாவா சொத்து தனது அனுபவத்தில் தான் இருந்து வந்துள்ளது என்று நிரூபிப்பதற்கு மிக முக்கியான ஆவணம் என்றும் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3) எதிருரையின் சுருக்கம்:**

மனுதாரின் மனுவும் சட்டப்படியும், நியாயப்படியும் நிலைநிற்கத்தக்கதல்ல என்றும்,

அசல் வழக்கில் தங்களது தரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டு எழுவினாக்கள் வனைய நிலுவையில் உள்ளநிலையில் இம்மனு தாக்கல் செய்துள்ளது சட்டப்படி ஏற்றுக் கொள்ளக்கூடியதில்லை என்றும், அசல் வழக்கில் உறுத்துக்கட்டளை மனுவில் தங்கள் தரப்பில் சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டு விசாரணை பேச இருந்தநிலையில் மனுதாரர் தாக்கல் செய்திருக்கும் இம்மனு ஏற்றுக்கொள்ளக்கூடியதில்லை என்றும், மேற்படி மனுவில் தாக்கல் செய்துள்ள ஆவணமும் வாதியால் மோசடியாக உற்பத்தி செய்யப்பட்டுள்ளது என்றும், மேற்படி ஆவணத்திற்கும், தாவா சொத்திற்கும் யாதொரு சம்பந்தமும் இல்லை என்றும் எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**4. <u>இம்மனுவில் தீர்க்க வேண்டிய பிரச்சனை: இம்மனு அனுமதிக்கத்தக்கதா/இல்லையா என்பதேயாகும்:-</u>**

மனுதாரார் மனுவில் கூறியுள்ள காரணங்கள் ஏற்கத்தகுந்த நிலையில் உள்ளது. எதிர்மனுதாரர்கள் தரப்பு எதிருரையில் ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டுள்ளது. இருதரப்பு வாதங்களை கேட்டு முடிவு செய்ய வேண்டும் என்பது நீதியின் நலனுக்கு உகந்ததாக இருக்கும் என்று இந்நீதிமன்றம் கருதுகின்றது.

> "Audi alteram partem is a Latin phrase meaning 'listen to the other side', or "let the other side be heard as well". It is the principle that no person should be judged without a fair hearing in which each party is given the opportunity to respond to the evidence against them."

மாண்புமிகு உச்சநீதிமன்றம் வழக்கில் சொல்லியுள்ள **'Bipin Shantilal panchal vs State of Gujarat"** முக்கிய கோட்பாடான

**OBJECTIONS AS TO ADMISSIBILITY OF EVIDENCE**

> Comment: In this court laid down a prudent system of dealing with objections as to admissibility of exhibits. It said that ordinarily if there is an objection - the court shall receive the disputed evidence along with a record of objection, and place it tentatively as an exhibit, later at the time of judgment the objection.

என்ற கோட்பாட்டின் அடிப்படையில் மேற்கண்ட ஆவணங்களை குறியீடு செய்ய அனுமதி வழங்கி உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

**மேற்கண்ட காரண காரியங்களின் அடிப்படையில் தாவா மனுவானது அனுமதிக்கப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.**

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்த்து, பிழை நீக்கம் செய்யப்பட்டு, 2025-ம் ஆண்டு ஜீன் 21ம் நாள் திறந்த நீதிமன்றத்தில் என்னால் அவையறிய பகரப்பட்டது.

S MOHAMED YOUSUF NAVAZ
Digitally signed by S MOHAMED YOUSUF NAVAZ
Date: 2025.06.21 11:02:12 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மானாமதுரை.

**மனுதாரர் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:** இல்லை

**எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:** இல்லை

S MOHAMED YOUSUF NAVAZ
Digitally signed by S MOHAMED YOUSUF NAVAZ
Date: 2025.06.21 11:02:27 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மானாமதுரை.

**District Munsif Court**

**Manamadurai**

**IA.No. 3/2025**

**in**

**OS.No. 79/2022**

**<u>Order</u>**

**Dated 21.06.2025**